தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 2470/F/2024**

திரு. S.K.அருமைராஜ் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
உதவி இயக்குநர்,
மாநில அரசு தணிக்கைத் துறை, .. பொது அதிகார அமைப்பு
நந்தனம், சென்னை-35.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.S.K.அருமைராஜ் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.சு.டில்லி, உதவி இயக்குநர், இயக்குநர் அலுவலகம், மாநில அரசு தணிக்கைத்துறை, பேராசிரியர் அன்பழகன் மாளிகை, 4வது தளம், நந்தனம், சென்னை-35 அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 03/04/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் தங்கள் அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்கள் அணியும் அடையாள அட்டைகள் ஒளிநகலாக வழங்கவும் கடித எண்.3975/ஏ/2005/1 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை தலைமைசெயலகம் சென்னை, நாள் 22/02/2005 மற்றும் தனது 12.02.2024 நாளிட்ட புகார் மனு குறித்த விசாரணை செய்த அலுவலர் மற்றும் பதவி விபரம் விசாரணை அறிக்கை ஒளிநகல் வழங்குவது என்பன போன்ற 9 தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் மனுவினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை கடிதத்தை அனுப்பியுள்ளார். மேலும் பொதுத்தகவல் அலுவலர் மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் கோரியுள்ள தகவல்களுக்கு 29.04.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இருப்பினும் மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 18(1)ன் கீழ் 14.05.2024 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 29.04.2024 மற்றும் 09.07.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் இனம் வாரியாக தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஒப்புகை அட்டையின் நகலுடன் ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு சரியான தகவல் கிடைக்கவில்லை என்றும் தனது புகார் மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற தகவல் வேண்டும் என்றும் கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் இவ்வாணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

**மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள புகார் மனு, சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை என தெரிகிறது. எனவே மனுதாரர் தனது புகார் மனுவினை மீண்டும் ஒரு முறை பொது தகவல் அலுவலர் / உதவி இயக்குநர், உள்ளூர் நிதி தணிக்கை துறை இயக்குநரகம், நிதித்துறைக்கான ஒருங்கிணைந்த அலுவலக வளாகம், நந்தனம், சென்னை -35 அவர்களுக்கு அனுப்ப அறிவுறுத்தியும் அது குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர் விசாரணை செய்து மனுதாரர் 6(1)ன் கீழான மனுவில் கோரியுள்ள புகார் மனு தொடர்பான தகவல்களுக்கு உரிய தகவல்களை மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல், மனுதாரருக்கு அனுப்பிய தகவல் மற்றும் புகார் மனு குறித்து விசாரணை செய்த அறிக்கை ஆகியவற்றை இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து தற்போதைய**

**பொதுதகவல் அலுவலர் 12.05.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2470/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
உதவி இயக்குநர்,
மாநில அரசு தணிக்கைத் துறை,
நந்தனம், சென்னை-35.

**<u>புகார்தாரர்:-</u>**

திரு.S.K.அருமைராஜ்,
754/15, கீழபாறைப்பட்டி,
குருமலை அஞ்சல்,
கயத்தார் தாலுகா,
தூத்துகுடி-628714.

Copy to file: KR/PA